**CTCLSA பணச் சந்தை நிதியம் (ஆரம்பம் : 27 பெப்ரவரி 2012)**

**நிதிய முகாமையாளர்**

குகன் விநாயகசுந்தரம்

**நிதியத்தின் குறிக்கோளும் அளவுகோலும்**

நிதியமானது 365 நாட்களுக்குள் முதிர்வடையும் முதலீட்டுத் தரமுடைய பிணையங்களில் முதலீடு செய்யும் ஒரு திறந்த யுனிட் ட்ரஸ்ட் நிதியமாகும். நிதியத்தின் முதலீட்டுக் குறிக்கோள் குறைந்த மட்டத்திலான இடரைக்கொண்ட ஒரு பிணையங்கள் தேக்கத்தில் முதலீடு செய்வதன்மூலம் ஒரு வருடாந்த வருமானத்தினை வழங்குவதாகும்.

**கருத்துரை**

டிசம்பர் 2024 இல் நிறைவடைந்த ஆண்டின்போது CTCLSA பணச் சந்தை நிதியமானது அதன் முதலீட்டாளர்களுக்கு ஒரு வருடாந்த விளைவாக 10.55% இனை வழங்கியுள்ளது. நிதியமானது பிரதானமாக அரசாங்கப் பிணையங்களிலும் உயர் தரத்திலான நிலையான வைப்புகளிலும் முன்னிறுத்தம் செய்கின்றது.

**நிதியத்தின் கட்டணங்கள்**

முகாமைத்துவக் கட்டணம் 0.6% (தே.சொ.பெ. இன் % ஆக)

நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டணம் 0.15% (தே.சொ.பெ. இன் % ஆக)

**காட்சிப்பொருள் 02: நிதியத்தின் விளைவு எதிர் அளவுகோல் விளைவு**

| காலம் | GAMMF | NDBIB-CRISIL 91 நாள் தி.உண்டியல் சுட்டி | GAMMF-வருடாந்தம்* |
|---|---|---|---|
| 2024 | 10.55% | 11.67% | 10.55% |
| தொடக்கத்திலிருந்து | 265.54% | 257.84% | 10.64% |

** செயற்திறன்கள் 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான மாத இறுதி விலைகளின் அடிப்படையிலாகும். இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திறன் தரவுகள் கடந்தகால செயற்திறனை பிரதிபலிப்பதுடன், இவை எதிர்கால விளைவுகளுக்கான உத்தரவாதமல்ல.*

பணவீக்கத்தினை அதன் இலக்கான 5.0%[4] இற்கு திருப்பும் நோக்கில் மத்திய வங்கியானது அதன் தளர்வான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை பராமரித்தது. இதன் விளைவாக, வருடம் முழுவதும் கொள்கை வட்டி வீதங்களை மொத்தமாக 200 அடிப்படை புள்ளிகளினால் குறைத்தது. இத்தீர்மானமானது சமீப காலத்தில் எதிர்பார்த்ததிலும் பார்க்க ஆழமான பணச்சுருக்க நிலைமைகள், உள்ளார்ந்த பணவீக்க அழுத்தங்கள் மற்றும் எதிர்பார்புக்களின் தொடர்ச்சியான மிதமான நிலைமை உள்ளடங்கலான முக்கிய காரணிகளினால் இயக்கப்பட்டன. மேலும், மத்திய வங்கியானது 27 நவம்பர் 2024 முதல் ஒரு தனி வட்டிவீத பொறிமுறைக்கு நகர்ந்து ஓரிரவு கொள்கை வட்டி வீதமாக 8.0%[4] இனை நிறுவியது.


கொள்கை வட்டி வீதங்களுக்கு ஏற்ப சந்தை வட்டி வீதங்கள், குறிப்பாக அரசாங்கப் பிணையங்களிலான விளைவும் குறைவடைந்துள்ளது. இதன் பிரகாரம், டிசம்பர் 2024 இன் இறுதியில் 91 நாட்கள், 182 நாட்கள் மற்றும் 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் முறையே 8.62%[4], 8.77%[4], 8.96%[4] ஆக காணப்பட்டன. வருவாய் அடிப்படையிலான இறைவரி ஒருங்கிணைப்பு வழிமுறைகள் மற்றும் சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணமனுப்பல்கள்

வடிவில் மேம்பட்ட வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களின் காரணமாக சந்தை திரவத்தன்மையானது மேம்பட்டது.


கருத்திலெடுக்கப்படும் காலத்தின்போது நிதியமானது வீழ்ச்சியடையும் வட்டி வீதச் சூழலின் கீழ் விளைவுகளை மேம்படுத்துவதற்காக அரசாங்கப் பிணையங்களுக்கான அதன் ஒதுக்கீட்டினை அதிகரித்தது. அதேவேளை நிதியமானது முதலீட்டுத் தர வரன்முறையினை சந்திக்கும் நிலையான வைப்புகளுக்கான அதன் ஒதுக்கீட்டினை பராமரித்தது. இதன் பிரகாரம், டிசம்பர் 2024 இன் இறுதியில் அரசாங்கப் பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளுக்கான நிதியத்தின் வெளிப்பாடுகள் முறையே 54.71% மற்றும் 37.92% ஆக காணப்பட்டன.

**நிதியத்தின் முக்கிய தரவுகள்**

**நிதியத்தின் கடன் தரம் - தே.சொ.பெ. இன் % ஆக**





**சொத்து ஒதுக்கீடு**





31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான நிதியத்தின் மொத்த தேறிய சொத்தின் பெறுமதி ரூபா 738.98 மில்லியன் என்பதுடன் நிதியத்தில் 362 அலகுடைமையாளர்கள் உள்ளார்கள். 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான நிதியத்தின் அலகொன்றின் கொள்விலை மற்றும் மீட்டெடுத்தல் விலை ரூ. 31.7417 ஆகும்.

முதிர்வுத் தோற்றுருவம் - தே.சொ.பெ. இன் % ஆக




கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் (கொ.ப.ப.) செயற்திறன் - 2024




கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது வருடத்தினை ஒரு சாத்தியமான விதத்தில் ஆரம்பித்து ஜூன் 2024 இன் இறுதியில் இங்கு ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பொதுத் தேர்தல்களை முன்னிட்டு எற்பட்ட அரசியல் உறுதியின்மையின் காரணமாக சந்தையானது ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஒரு கடுமையான வீழ்ச்சியினை அனுபவித்தது.

வெளிவாரி கடன் மீள்கட்டமைத்தல் செயன்முறையின் வெற்றிகரமான நிறைவு மற்றும் விட்ச் ரேட்டிங்ஸ் மற்றும் மூடீசின் கடன் தரத்தின் தரமுயர்த்தலினைத் தொடர்ந்து முதலீட்டாளர் உணர்வானது கணிசனமானளவு மேம்பட்டது. இதற்கு அரசியல் உறுதியின்மைக்கான தீர்வு மற்றும் அரசாங்கம் 2/3 பெரும்பான்மையினை பெற்றுக்கொண்டமை மேலும் துணையளித்தன. அ.ப.வி.சு. முன்னைய உச்சநிலையான 14,000 மட்டங்களைக் கடந்து 15,000 இனை எட்டியது. இதன் பிரகாரம் அ.ப.வி.சு. மற்றும் S&PSL20 சுட்டி என்பன முறையே 34.50%[6] மற்றும் 40.79%[6] அதிகரிப்புடன் வருடத்தின் இறுதிக் காலாண்டில் மனதில் பதியத்தக்க வளர்ச்சியினை பதிவு செய்தன.

இதன் விளைவாக, டிசம்பர் 2024 இன் இறுதியில் அனைத்து பங்கு விலைச் சுட்டியானது 49.66%[6] அதிகரிப்பினை அடைந்தவேளை மிகவும் திரவத்தன்மையான S&PSL20 சுட்டி 58.46%[6] ஆல் அதிகரித்தது. டிசம்பர் 2023 இன் இறுதியில் அ.ப.வி.சு. மற்றும் S&PSL20 சுட்டி என்பன முறையே 25.50%[6] மற்றும் 16.42%[6] வளர்ச்சியினைப் பதிவுசெய்தன.